பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹு வைகாசி மீ 29 உ புதன்கிழமை (12-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 190

## 418 பேர் உஷ்ணத்தால் உயிர்துறப்பு!

இஸ்லாமபாத், ஜூன் 12

அனல் காற்று சாரணமாக பாகிஸ்தானின் பல பகுதிகளில் கடந்த பத்துத் தினங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 418 ஆக அதிகரித்தது.

நேற்று மட்டும் 1:6 பேர் உஷ்ணம் தாங்காது உயிர் துறந்தனர். [உ-எ]

# அரசாங்கத்துடன் பேச விடுதலைபுலிகள் தயார்!

## ஜேர்மனியில் லோறன்ஸ் திலகர் பேட்டி

பேர்லின், ஜூன் 12

உள்நாட்டுப் போரை நிறுத்தி, தீர்வு காண்பது குறித்து சிறீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

— இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் கூறியிருக்கிறார்.

ஜேர்மனியில் இருந்து தொலைபேசி மூலம் ஏ.பி. செய்தி ஸ்தாபனத்திற்கு அவர் பேட்டி அளித்தார்.

அப்பேட்டியில்—

''ஸ்ரீலங்கா அரசுடன் நேரடியாக எந்த வித நிபந்தனையும் இன்றி— ஐரோப்பிய நாடு ஒன்றில் வைத்து பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக எவ்வித ஆதாரமும் இன்றி விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டக் கூடாது''— என்று அவர் சொன்னார்.

''ராஜீவ் படுகொலையில் சந்தேகிக்கப்படும் இயக்கம் ஒன்றுடன் பேச்சுக்களை நடத்த இலங்கை அரசு விரும்பவில்லை'' என ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியிருப்பதை திரு திலகர் குறை கூறினார்.

''ராஜீவ் படுகொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்படவில்லை. ஸ்ரீலங்கா அரச சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வராமலிருக்கச் செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]



நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் மாமனிதர்களுக்கு தேசிய விருது வழங்கும் வைபவத்தில் தலைவர் வே. பிரபாகரன் உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படம்.

## ஜனசமுத்திரத்தின் மத்தியில் நெல்லியடியில் முத்தமிழ்விழா

— நெல்லியடியிலிருந்து கே ஜி. லிங்கம், பா, இரகுநாதன் —

நெல்லியடி ஜூன் 12

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழாவின் ஆறாம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று மாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இதற்கென அமைக்கப்பட்ட மாவீரர் கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றன.

பல்லாயிரக்கணக்கில் மக்கள் இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு அருச்சுனா தமிழீழ தேசியக் கொடியையும், மங்கள விளக்கையும் ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து காரை நகர் என்.கே. கணேசன் குழுவினரின் மங்கள இசை இடம் பெற்றது.

மாலை 7 15 மணிக்கு திரு: அருச்சுனா திற புரை நிகழ்த்தி

[6ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பிலிருந்து உணவுப்பொருள்; ஒரு வருடத்தில் $\frac{1}{3}$ பங்கே கிடைத்தது!

யாழ்ப்பாணம், ஜூன் 12

அரசு — விடுதலைப் புலிகள் யுத்தம் தொடங்கிய பின்னர், கடந்த ஒருவருட காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ் செயலகத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

அரிசி மா, சீனி ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களை உணவுத் திணைக்களம் மூலம் அனுப்பி வைப்பதே வழமையான நடைமுறை.

ஆனால் யுத்தம் தொடங்கியதும் அத்தியாவசிய சேவைகள் நாயகம் பகுதி ஆரம்பிக்கப்பட்டு, அதன் ஊடாகவே அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்ப ஒழுங்காகியது.

கொழும்பு — யாழ்ப்பாணம் ரயில் மற்றும் தரை வழிப் பயணம் தடைப்பட்டதால் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு உணவுப் பொருள் அனுப்பி வைக்கப்படுவதாக அரசாங்கப் பிரசார சாதனங்கள் தம்பட்டம் அடிக்கின்றன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மூளாய் மீது ஷெல் தாக்கு!

காரைநகர் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்றுப் பகல் 10 மணியளவில் மூளாய்ப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

மூளாய்ப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் மூன்று ஷெல்கள் விழுந்து வெடித்தன.

பத்மநாதன் சுஜின் [வயது 10] என்ற சிறுவன் உட்பட இலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

தெய்வாதீனமாக குடியிருப்புகள் மீது ஷெல் விழாததால் பெருஞ்சேதம் தவிர்க்கப்பட்டது. [உ-5]

## மட்டக்களப்பில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலிருந்து முன்னேற முயன்ற இராணுவ அணிகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

செங்கலடி, கரடியனாறு பகுதிகளிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது மயிலவெட்டுவானில் வைத்தும்—

புலிபாய்ந்தகல் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது அடிக்கல் என்ற இடத்தில் வைத்தும்—

வாகனேரிப் பகுதி இரா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தல் முன்னேற்பாடாக பஞ்சாப்பில் படைக்குவிப்பு!

தேர்தல் நடைபெறும் இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்பதாக பஞ்சாப் மாநிலத்திற்கு 62 ஆயிரம் பரா இராணுவத்தினர் அனுப்பப்படுவர் என புதுடில்லி அரசு அறிவித்துள்ளது.

3 ஆயிரத்து 500 கம்பெனி பரா இராணுவத்தினர் இம் மாநிலத்திற்கு அனுப்ப ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டதாகவும் அரசாங்கம் தெரிவித்தது.

இதைவிட மேலதிகமாக நூறு கம்பெனி பரா இராணுவத்தினரும் அங்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## தஞ்சாவூர் கடற் பகுதியில் மூன்று ஈழத் தமிழர் கைது!

சென்னை, ஜூன் 12

தஞ்சாவூர் மாவட்டம் பூம்புகார் கடற்கரைக்கு அப்பால் நடுக்கடலில் வைத்து மூன்று ஈழத் தமிழர் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்களிடம் இருந்ததாகக் கூறப்படும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான டீஸல் மற்றும் பெற்றோல் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன.

இம்மூவரும் முன்னர் நாகபட்டினம் அகதிமுகாமில் தங்கியிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## முச்சந்தி முரளி



## ராஜீவ் கொலைச் சம்பவம்: படப்பிடிப்பாளர் மீதும் இப்போது சந்தேகம்!

சென்னை, ஜூன் 12

ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த படப்பிடிப்பாளர் ஹரி பாபு என்பவர் குறித்து ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் இந்திய புலனாய்வுத் துறையினர் பலத்த சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

— இப்படி சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

உயிரிழந்த படப்பிடிப்பாளரைப் பயன்படுத்தியே— குண்டைத் தன் வசம் வைத்திருந்த பெண்ணினால் ராஜீவ் காந்தி அருகே நெருங்கிச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முருகேசு சிவலிங்கம்

தோற்றம்: 13 - 07 - 1913

மறைவு: 15-05 - 1988

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்,

[4137]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 08 - 08 - 1956

உதிர்வு: 12 - 12 - 1990

அமரர்

### சிவப்பிரகாசம் சிவகுமாரன்

[இயந்திரப் பொறியியலாளர், காங்கேசன் சிமெந்து ஆலை]

ஐயனிலும் நாயகமாய் நடுநின்ற ஒளிவிளக்காய்
மெய்யவனையின் இயரமெனும் பொறியியலின் மேதையாய்
தெய்வீகத்தின் திருவுருவாய் கணிதத்தின் நிகரிலாறி
மெய்விளக்கம் பெற்ற நிலை என்னினால் ஆகுமோ?

உமது ஆன்மா சாந்தியடைய இறைவனை பெருமானை வேண்டுகின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

5 ணியகாரன் வீதி,
மண்டைதீவு.

[17159]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 06 — 1927

இறப்பு: 12 — 06 — 1989

அமரர்

### சின்னத்தம்பி சிவலோகசுந்தரம்

ஈராண்டு சென்றதையா எமைப் பிரிந்த எம் தலைவா
பேராண்ட பெருந்தகையே நீங்கள் - எமக்களித்த
சீராண்ட சொல்வழியே நிற்கின்றோம் - தரணியிலே
வேரூன்ற ஆலமர விழுதுகளாய்-வாழ்ந்திருப்போம்

மனைவி, மக்கள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"நிலகந்தா"
மாவிட்டபுரம்.

[4124]

## ஊர்காவற்றுறை மாணவருக்கான உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஊர்காவற்றுறைக் கோட்டத்துக்குள் அடங்கும் பாடசாலை மாணவர்களுக்கான பெப்ரவரி மாதத்துக்கான மதிய உணவு முத்திரைகள் யாழ். மத்திய கல்லூரியில் பாடசாலை நாட்களில் பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 4-00 மணி வரை அப் பாடசாலை அதிபர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

## நன்கொடைப் பணம்

காங்கேசன்துறை, ஜூன் 12

காங்கேசன்துறை பிரதேச சபை எல்லைக்குள், மூன்று நன்கொடைப் பணம் பெற்ற சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மருதனார் மடத்தில் தற்காலிகமாக இயங்கும் காங்கேசன்துறை பிரதேசசபை அலுவலகத்தில் சமுகம் அளிக்குமாறு காங்கேசன்துறை பிரதேசசபையின் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் திரு. கி. மகாலிங்கம் கோரி உள்ளார்.

[இ-68]

## பம்பாயில் வெள்ளத்துக்கு 81 பேர் பலி

பம்பாய், ஜூன் 12

பம்பாயில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்தது.

வீடுகள் இடிந்து விழுந்ததினாலும், சுவர்கள் சரிந்ததினாலும் வெள்ளத்தில் மூழ்கியும் பலர் உயிரிழந்தனர்.

(இ - ஏ)

## காங்கிரஸ் முன்னணியில்?

புதுடில்லி, ஜூன் 12

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவு எப்படி அமையும் என்பது குறித்து 'சண்டே மெயில்' பத்திரிகை கருத்துக் கணிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அதன் பிரகாரம்—

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 185 முதல் 215 ஆசனங்களும்—

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளுக்கு கூட்டாக 146 முதல் 175 ஆசனங்களும்—

பாரதீய ஜனதாக் கட்சிக்கு 115 முதல் 145 ஆசனங்களும்— கிடைக்கலாம் என்று ஹேஷ்யம் கூறப்பட்டுள்ளது.

[இ-ஏ]

## மாங்குளம் கிளை துணுக்காயில்

யாழ்ப்பாணம், ஜூன் 12

மக்கள் வங்கி மாங்குளம் கிளை துணுக்காய் ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

மாங்குளம் கிளை யாழ் பிரதேச தலைமை அலுவலகத்தில் இயங்குகிறது என்பது தவறு ஆகும். (இ)


## தேவை

உரும்பராயில் உள்ள பாலர் பாடசாலைக்கு பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை:

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

'கந்தன் கருணை'
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

[17169]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 16 — 8 — 1985

இறப்பு: 13 — 5 — 1991

செல்வி

### றொசானி சிவபாலன் [யேம்ஸ்]

[1 ஆம் ஆண்டு மாணவி, யாழ். தி. கு. கன்னியர்மடம்]

அகல் விழியாலும் முல்லை நகையாலும்
சொல்லினழகாலும் மெல்ல நடையாலும்
பள்ளித் திறனாலும் அள்ளி மகிழ்வித்து
துள்ளி விளையாடும் றொசானி - நீ
எங்கு சென்றாய்!

உமது பிரிவுத் துயரால் வருந்தும்;

தாய்: திரேசம்மா சிவபாலன்,
சகோதரி: இந்துஜா மற்றும் பெரியம்மா,
பெரியப்பா, சகோதர, சகோதரிகள்,
அத்தான்மார், பேரனார்.

அன்பர்களே!

றொசானியின் மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும், மலர்வளையம் சமர்ப்பித்தவர்களுக்கும், பலவித உதவிகள் செய்தோருக்கும், இல்லத்துக்கு வந்து அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

24, 1 ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

[17154]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயக மண்ணில் பிறப்பு: 21 - 09 - 1977

ஆண்டவன் குண்டால் பறிப்பு: 14 - 05 - 1991

செல்வன்

### வேலும்மயிலும் பரஞ்சோதி [பவுண்]

[மாணவன், யா/இதம்பராக் கலைூரி வல்வெட்டித்துறை]

திருவில் வெளியினில் தோழரோடு நீ
வந்தடித்துக் களித்திருக்கையில்
காரிருள் சூழ்தரு மாலைப் பொழுதினிலே
கொடுஞ் சிங்களன் குண்டுபட்டு இறந்தனை
சேரின வாதம் பறந்திடும் பார் - இப்
பாரினில் செம்புகழ் ஓங்கும் பார்
உன்னுடன் சென்றவர் பல நூறும்
உன்னத மோட்சம் அடைந்திடுவார்.

14 - 05 - 1991 அன்று அகாலமரணமடைந்த எமது அன்புச் செல்வம் வே. பரஞ்சோதியின் [பவுண்] இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டோருக்கும், அவரது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

18 - 06 - 91 [செவ்வாய்க்கிழமை] நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், நண்பகல் வீட்டில் நடைபெறும் சபிண்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவை மறவாத

பெற்றோர், சகோதரர்கள்; அத்தான்மார், அண்ணி, பெறாமக்கள்.

மாவீரர் வீதி,
வல்வெட்டித்துறை.

[4129]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மிகத் தேவை

ஈழத் தமிழர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தனித்துவம் கொண்ட ஓர் இனமாகத் தமிழர்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். எவ்வித இடைவெளியோ, வரலாற்றுத் தழும்பலோ இன்றித் தொடர்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள்.

தனியான மொழி, தனித்துவமான கலைகள், அப்பழுக்கில்லாத கலாசாரம், பண்பாடு என்பவற்றைக் கொண்டு, தமக்கென ஒரு தாயகத்தைக் கொண்டு, தனி ஆட்சி உரிமையுடன் வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

தமிழர்களின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சோதனைகளும், ஆபத்துகளும் நேர்ந்த போதிலும் அவை இன்னும் கட்டுக்குலையாமலே உள்ளன. மிகக் குறிப்பாக வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளினால் இவ்வித ஆபத்துகளும், அச்சுறுத்தல்களும் எழுந்தன. எனினும் எமது மொழி முதல் பண்பாடு வரை, வளர்ச்சி அடைந்து மேம்பாடு காண முடியாவிட்டாலும், தமது கட்டமைப்பை இழந்துவிடவில்லை; தறிகெட்டுக் குலைந்துவிடவில்லை.

அப்படி ஒரு நிலைமையை உண்டாக்குவதற்குச் சிங்களப் பேரினவாதம் கடந்த அரை நூற்றாண்டாக முயற்சித்து வருகிறது. தனிச் சிங்களச் சட்டம், தமிழர் கலை, கலாசாரம், பண்பாட்டுக்கு உரிய அந்தஸ்தும், முக்கியத்துவமும், பிரசித்தமும் வழங்காமல் புறக்கணிப்பது எல்லாம் அவற்றின் கட்டமைப்பைக் குலைத்துச் சிதறடிக்க வைக்கும் நடவடிக்கைகளே.

ஆனால் ஈழத்தமிழர்கள் தமது மொழி மீது பற்றும் கலை, கலாசாரம், பண்பாடுகளுக்கு அதீத ஆதரவும் நல்கும் வரை சிங்களப் பேரினவாதத்தால் தனது இலட்சியத்தை அடைந்துவிட முடியாது என்பது நிச்சயம்.

மொழி, கலை, கலாசாரம், பண்பாடுகளின் கட்டமைப்பைச் சீர்குலைத்துவிட்டால் ஈழத் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்று உரிமை கொண்டாடாமல் தடுத்துவிடலாம் என்பதே சிங்கள அரசுகளின் முழு நோக்கமும், இலக்கும் ஆகும்.

அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. ஒரு தேசிய இனத்துக்கே சுய நிர்ணய உரிமைக்கு அதிக பாத்திரதை உண்டு. தமிழர்கள் இப்போது கோரும் சுயநிர்ணய உரிமைக்கு, அவர்களை அருகதை இல்லாதவர்கள் ஆக்கிவிட வேண்டுமெனின், அவர்களின் தேசிய இனக் கட்டமைப்பை நொறுக்கி, ஒடித்துவிட வேண்டும் என்பதாலும்.

இந்தச் சூழ்ச்சியின் ஓரங்கமாகவே, தமிழர்களுக்கு மொழி வாரி மாநில ஆட்சி உரிமை வழங்குவது பற்றிய பேச்சுகள் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் எழுந்தன. ஆனால் ஈழத் தமிழர்கள் தனித்துவமான தேசிய இனத்தவர் என்ற அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் அமைய வேண்டும் இதில் அதிக கவனம் தேவை.

இந்த வகையில் —

எமது தேசிய தனித்துவம் என்றும் அழிக்க முடியாத யதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்து கொண்டிருப்போம்— என்று விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபாகரன் கூறியிருப்பது மிகப் பொருத்தமாகிறது; அவசியமுமாகிறது முக்கிய தேவையுமாகிறது.

காரைநகரில்

# மக்கள் நடமாட படையினர் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 12

காரைநகரில் இளம் வயதினர் காலை 5 மணி முதல் 11 மணி வரையிலேயே நடமாட அனுமதிக்கப்படுகிறார்கள். பெரும்பான்மையான மக்கள் ஆலயங்களிலேயே தங்கியுள்ளனர். அங்கு இக்கியுள்ளவர்களும் ஒருவருடன் ஒருவர் தொடர்புகொள்ள முடியாத அளவு அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

காரைநகரில் சிக்கி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த வயோதிபப் பெண்ணான தங்கமுத்து கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

காரைநகரில் சிக்கியுள்ள வயோதிபர்கள் அச்சத்துடனும் போதிய பராமரிப்பு இன்றியும் கஷ்டப்படுகின்றனர். பலர் மனம் குழம்பிய நிலையில் வாழ்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

[இ-3]

## வேட்பாளர் நஞ்சருந்தி தற்கொலை

சென்னை ஜூன் 12

தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் கடந்த திங்கட்கிழமை விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

அந்த வேட்பாளர் முசிறி சட்டசபைத் தொகுதியில் போட்டியிடவிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அத்தொகுதியில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. சுயேச்சை வேட்பாளர் மாரடைப்பினால் இறந்ததைத் தொடர்ந்தே எழும்பூர் சட்டசபைத் தேர்தலும் ஒத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

[இ - எ]

## உருவவியல் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 12

'யாழ்ப்பாணக் குடா நாட்டின் உருவவியல்' சம்பந்தமான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். ரி. பி இராஜேஸ்வரன் கருத்துரை வழங்குவார்.

[இ]

## முத்தமிழால் ஆண்டு கொண்டாய்!

தாளம்: ஆதி இராகம்: ரஞ்சனி

பல்லவி

இத்தனை நாள் என்ன செய்தாய் - மனமே
இன்பத் தமிழைப்பாடி என்னை உயர வைத்தாய்

அனுபல்லவி

எத்தனை ஆயிரம் தான் இருந்தாலும்
அத்தனையும் தமிழால் பாட வைத்தாய் - மனமே

சரணம்

முத் தமிழால் என்னை ஆண்டு கொண்டாய்
இத் தரையில் நாம் வாழ வழியும் தந்தாய்
இனிய தமிழும் ஊட்டி உணர வைத்தாய் - மனமே
கனிவோடு நான் வாழ கலையும் தந்தாய்

......

வன்னியும் மன்னாரும் மீன்பாடு மாநகரும்
சென்னியில் நாம் வைத்த பேரருட் திருமலையும்
இன்னிலம் வளம்தரு யாழ்நகர் வீதியிலும்
இன்னரும் புலிக்கொடி பறந்திடும் புதுமையிது.

— வல்வை ந. அனந்தராஜ்

## ★ முத்தமிழ் விழா ★
## 7 ஆம் நாள் நிகழ்ச்சிகள்
## (12 - 06 - 1991)

இடம்: நெல்லியடி மாவீரர் கலை அரங்கம்

நேரம்: பிற்பகல் 5-30 மணி

### நிகழ்ச்சிகள் விவரம்

★ மங்கள இசை:

நாதஸ்வரம்:- திரு. பி. எஸ். பிச்சையப்பா
திரு. பி. ரஜீந்திரன்

தவில்: திரு. பி ரவீந்திரன்
திரு. எஸ். ராமு

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை:

★ சிறப்புரை: கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

★ வழக்காடு மன்றம்:

பொருள்: பாரதியின் கனவை நனவாக்கத் தவறிய காரணத்தால் குற்றவாளிக் கூண்டில் ஈழத் தமிழர்கள்

நீதிபதிகள்: வித்துவான் க. குமாரசாமி
திரு. இ. ஜெயராஜ்
புலவர் ஈழத்துச் சிவானந்தன்

தொடுப்பவர்கள்: திரு ரி. சிவக்குமாரன்
திரு. தி. திருநந்தகுமார்

மறுப்பவர்கள்: திரு பொன். கணேசமூர்த்தி
திரு வேலாயுதம்

★ இசைக் கச்சேரி:

| | |
|---|---|
| திரு எஸ் குமாரசாமி | — பாட்டு |
| திரு. எஸ். கேசபிதாஸ் | — வயலின் |
| செல்வன். கே. துரைராஜா | — மிருதங்கம் |
| திரு. எஸ் வேல்மாறன் | — கடம் |

★ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நடத்திய மாவீரர் நாள், இலக்கியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு

உசன் மாணவர் அமைப்பினர் வழங்கும்:

★ 'மீண்டும் எழுவோம்' — நாடகம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கும்:

★ 'நாளை விடியும்' — நாடகம்

## பெரிய சதியின் அங்கமே ராஜீவ் காந்தியின் கொலை
### ஜெயலலிதா சொல்கிறார்

சென்னை, ஜூன் 12

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது மிகப் பெரியதோர் சதித் திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும் என்று அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா திங்களன்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

இந்தக் கொலையில் வெளிநாட்டவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற வாய்ப்பையும் ஒதுக்கித் தள்ளி விட முடியாது என்றும் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

[த-எ]

# தமிழீழ தேசிய விருது பெற்றோர்

இந்த ஆண்டு எட்டுப் பேர் தமிழீழ தேசிய விருது வழங்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனால் மாவீரர்களாகக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அறுவர் பற்றிய விவரங்கள் உதயனில் ஏற்கனவே வெளிவந்துவிட்டன. மிகுதி இருவர் பற்றிய விவரங்கள் இன்று வெளியாகின்றன.

### சிவஞானசுந்தரம் பத்திரிகை

யாழ். மாவட்டம் வடமராட்சிப் பகுதியிலுள்ள கரவெட்டியில் பிறந்த திரு. சிவஞானசுந்தரம் 1965 செப்டம்பர் 15ஆம் திகதி முதல் ஈழத்தில் சிரித்திரன் என்ற பெயரிலான கார்ட்டூன் சஞ்சிகையை வெளியிட்டார்.

ஈழத்தில் சஞ்சிகை வெளியிடுவது என்பதுவே தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று கருதப்பட்ட காலத்தில் [illegible] உணர்ச்சி ததும்பும் கார்ட்டூன் சஞ்சிகையை வெளியிட்டு தொடங்கியவர் சிரித்திரன் சுந்தர் எனப்படும் திரு. சிவஞானசுந்தரம்.

எந்தவிதமான பின்னணிப் பலமும் இல்லாமல் சிரிக்கவும் சிந்திக்கவுமான பத்திரிகையைச் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக வெளியிட்ட திரு சுந்தர் புத்தக வெளியீட்டுத் துறையிலும் கால் பதித்தவர். தூரிகை கொண்டு சமூக முரண்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டி மனப்பக்குவத்தை ஏற்படுத்தப் பாடுபட்டவர். தமிழ்த் தேசிய இனவுணர்வின் ஊற்று நிலங்களில் ஒன்றாக விளங்கி வரும் திரு. சுந்தர் சிறீலங்கா அரசு வழங்கிய சாகித்திய மண்டலப் பரிசை நிராகரித்ததன் மூலமாகவும் தமது மன உணர்வை வெளிப்படுத்திக் காட்டியவர்.

பத்திரிகை வெளியீட்டுத் துறையில் குறிப்பிடப்பட வேண்டியவரான திரு. சுந்தர் நோய்வாய்ப்பட்டிருக்கும் இன்றைய நிலையிலும் [illegible] யீட்டுக்காக உழைத்து வருகிறார்.

### திருநாவுக்கரசு கலை [நாடகம்]

யாழ். மாவட்டத்திலுள்ள நாவன்மார்கட்டுப் பகுதியில் பிறந்தவர்களும் எஸ்.ரி. அரசு என பலராலும் அறியப்பட்டவருமான திரு. திருநாவுக்கரசு தமிழீழத்தின் நாடகத்துறை வரலாற்றில் குறிக்கப்பட வேண்டியவர் ஆவார்.

கலையரசு பாணியைப் பின்பற்றிய நாடகங்களில் தேர்ச்சி மிக்கவரான அரசு நாடகம் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் பயிற்சி மிக்கவர்.

நாடக பிரதி தொடக்கம் ஒப்பனை வரையில் அனைத்தையும் நுணுக்கமாக நுணுகி ஆராய்ந்து மேடையேற்றும் அரசு அவர்களின் முதலாவது நாடகம் காவல்வரியாகும்.

கலைஞானர் நாடக மன்றத்தில் இலக்குநராக இருக்கும் அரசு தாம் கற்பனையில் வடித்த ஒவ்வொரு பாத்திரத்தையும் தாமே உருவாக்கி மேடையில் தோன்றும் ஒவ்வொரு பாத்திரத்திலும் தமது முத்திரையைப் பதிப்பவராவார்.

புராண, வரலாற்று நாடகங்களை மேடையேற்றுவதில் அனுபவம் மிக்கவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்கான ஈடுபாடும், பட்டறிவும் கொண்டவர். 'குத்துவிளக்கு' என்னும் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டதன் ஊடாக திரைப்படத்துறையிலும் அறிமுகமானவர்.

இளவயதில் இந்தியாவில் சிற்பத்துறையில் பயிற்சி பெற்றவரான அரசு, சிறந்த புகைப்படக் கலைஞரும் ஆவார். தமிழுணர்வு கொண்டவரென்பதுடன் 1961 இல் இடம்பெற்ற அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வீரத்தழும்பு பெற்றவர் ஆவார்.

விடுதலைப் போராட்டம் வீறுடன் வளர அரசு நாடகத் துறையில் இன்னும் தன் பங்களிப்பை நல்கி வருபவர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் – 4 12.06.1991

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மத்து நான் குட்டியுடன் பாலசுடு ஒன்று [ஜமுனாபாரி X சணலும்] விற்பனைக்கு உண்டு. வைரவர் கடாட்சம், மலவி வீதி, திருநெல்வேலி வடக்கு. [17164]

### சாக்கு விற்பனை

கழிவுச் சாக்குகள் தொகை யாக விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் சந்நதி இல் சாக்குகளைப் பார்வையிட்டு 1991-6 14 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு முன்னர் கூறுவிலையை சமர்ப்பிக்கவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி 0103]

### ரைப்ரைட்டர்

Typewriters: Portable-Standard தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. மற்றும் Typewriters சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். FUDO: 89/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [சி-0152]

### தேவை

சாவகச்சேரி டிரிபேக் முதிவி பாலர் பாடசாலைக்கு அனுபவமுள்ள ஆசிரியை தேவை. விண்ணப்பிப்பவர்கள் 20 - 6 91 இற்கு முன்பாக விண்ணப்பிக்கவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. வீரசிங்கம், சாவகச்சேரி, ஆனைக்கோட்டை [17160]

### மணமகள் தேவை

ஆஸ்திரேலியாவில் தொழில் புரியும் யாழ்ப்பாண இந்து இலங்கை கணிதம், லண்டன் கம்பியூட்டர் பட்டதாரி மணமகனுக்கு அழகான, பண்புள்ள 25 வயதுக்குட்பட்ட பட்டதாரி அல்லது C.I M A. மணமகள் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது. சகல விவரங்களுடனும் தொடர்பு: இல. 317, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [17151]

### புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு 5

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 16 - 06 - 91 ஞாயிறு மு. ப 8-00 / மு. ப 10 30 / பி. ப 1-00 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்; பி ப 4-00 குளப்பிட்டி ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் மேற்கில் நடைபெறும். புலமைப்பரிசில் Paper Class-Weekend Class 16-06-91 இல் ஆரம்பமாகின்றன. [17161]

### கல்வி

O/L கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆண்டு 10 இல் இருந்து 5 வரை அனுபவமுள்ள ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி [17165]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணெய் ஸ்ரீ மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [4116]

### வைத்திய நிலையம்

வேலணையிலும், புளியங்கூடல் சந்தி சரவணை வீதியிலும் இயங்கி வந்த எமது வைத்திய நிலையம் தற்காலிகமாக கஸ்தூரியார் வீதி, 140 ஆம் (820) இலக்க கட்டடத்தில் இயங்கி வருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம் 40, நெடுங்குளம் வீதி, கொழும்புத் துறை. [17074]

# கிராம சேவையாளர்களின் அலுவலக தினங்கள்

கிராம சேவையாளர்களின் அலுவலக தினங்களாக திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களையும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. இது பற்றிய சுற்றறிக்கை மாகாண அமைச்சு, அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

EXAMINATION FOR RECRUITMENT OF

## ENGLISH ASSISTANT TEACHERS

ஜுலை 91 இல் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 16 - 06 - 1991 9-00 a.m.

- ★ G C.E. O/L, N.C.G E பரீட்சைகளில் ஒரே தடவையில் ஆங்கிலம் உட்பட 8 பாடங்களில் திறமைச் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ★ வயதெல்லை 18 — 40
- ★ விண்ணப்ப முடிவுத் திகதி 14 - 06 - 1991

விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்

1. இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
2. கட்டணம் ரூபா 150-00 (முழுப் பயிற்சிக்கும்)
3. பல அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை.

விவரங்களுக்கு: நேரில்

## ASTAN INSTITUTE,

101 / 10, STANLEY ROAD, JAFFNA.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(இ-0041)

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி

## செல்லம்மா கோவிந்தபிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி)

தோற்றம்: 29 — 12 — 1924 | மறைவு: 24 — 05 — 1990

திதி: 12 — 06 — 1991

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளி விளக்காய்
பதவியில் மேன்மையாய்
இல்லறம் என்னும் நல்லறத்தை
இனிதே நடத்தி திடீரென மறைந்த
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

"செல்வநிதி"
டச் றோட், சாவகச்சேரி. [17157]

# 2ஆம் மாத நினைவஞ்சலி

(12 - 06 - 1991)

அமரர்

## செல்லப்பா விசாகப்பெருமான்

(இளைப்பாறிய தபாலதிபர்)

புலவர் வளவு நயினாதீவைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபர் அமரர் செல்லப்பா விசாகப் பெருமான் அவர்களது இரண்டாவது மாத ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கூட்டம் இன்று 12 - 06 - 1991 புதன் கிழமை மாலை 4-00 மணியளவில் 61 A, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. பிரார்த்தனைக் கூட்டத்தில் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

வே. க. த. தம்பிமுத்து.

61 A, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். [17166]

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இ. நவரட்ணம்

மலர்வு: 17 — 01 — 1930 | உதிர்வு: 27 — 05 — 1987

திதி: 12 - 06 - 1991

நான்கு ஆண்டுகள் சென்றாலும்
ஏற்றி வைத்த அன்புத் தீபம் அணையாது.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
மனைவி,
தகப்பன், சகோதரன், சகோதரி.

27/4, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். [17059]

# மரண அறிவித்தல்

## செல்வி சுபோஷினி தம்பிராசா

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோண்டாவிலில் வசித்தவருமாகிய செல்வி சுபோஷினி தம்பிராசா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா, திருமதி ராஜேஸ்வரி தம்பிராசா ஆகியோரின் புதல்வியும், அருந்ததி (கனடா), பிறேம்வரதன் (மே. ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் சமர்கிரியைகள் 12 - 06 - 1991 புதன் கிழமை காலை 9-00 மணிக்கு 123/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறும்.

தகவல்:
நா. தனபாலசிங்கம்
(உதவி அரசாங்க அதிபர், வேலணை)

123/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [17162]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவு பரீட்சை-1991

**English Teachers Selection Examination 1991**

- ✶ தரமான பாடக் குறிப்புகளுடன் கூடிய மாதிரி வினா - விடை கொண்ட கற்கைநெறி
- ✶ பரீட்சை ஆரம்பிக்கும் திகதி வரை.

வாரந்தோறும் 6 மணித்தியால போதனை

ஆசிரியர்:
த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 17 - 06 - 1991
மு. ப. 9-30

தொடர்புகளுக்கு:

**NEW SCIENCE ACADEMY**
KANNATHIDY, JAFFNA.

[இ-0048]


## இணக்கம் இல்லாவிடில் மாற்று வழி

அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் இனப் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்றை கருத்துடன் பாகிழன் அடிப்படையில் காணமுடியாத நிலை ஏற்படுமிடத்து. அரசாங்கம் மாற்று வழி ஒன்றை நாடவிருக்கிறது!

இத்தகவலை ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கடந்த திங்கட்கிழமை கொள்ளுப்பிட்டி இரமோதவசபை மண்டபத்தில் நடந்த வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் [இ - எ]


## I. D. P.
### கம்பியூட்டர் பயிற்சி நிலையம்

பிரதான வீதி, மானிப்பாய்.

BASIC, COBOL, d BASE III+, LOTUS 123, MS DOS Operating System ஆகிய பயிற்சி நெறிகளுக்கான அடுத்த புதிய பிரிவுகள்

சனிக்கிழமை 15 - 06 - 91 ஆரம்பம்

| | | | |
|---|---|---|---|
| காலை | 9-00 | — | 11-00 |
| | 11-00 | — | 1-00 |
| மாலை | 2-00 | — | 4-00 |
| | 4-00 | — | 6-00 |

மாணவர்கள் 15 - 06 - 1991 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

க. தளையசிங்கம்,
Managing Director.

[இ-0046]



# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKKODDAI

தற்போதைய நிலைகளைக் கருத்தில் கொண்டு 91 / 92 கல்வியாண்டுக்கான தன் பயிற்சி நெறிகளை

**யாழ்ப்பாணத்திலும்**

(St. Johns Academy, Main St., Chundikuli)
நடத்த உத்தேசித்துள்ளது.

### பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் JULY 1991 இல் ஆரம்பமாகின்றன

**1. Technician Diploma Courses**
(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

- (i) Electronics & Communication
- (ii) Mechanical Engineering
- (iii) Electrical Engineering
- (iv) Civil Engineering (2 Years)

கல்வித் தகைமை:
G C E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 3 வருடங்கள்

**2. Diploma Courses**
(ஆங்கில மூலம்)

- (i) Draughtsmanship (Civil)
- (ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & d BASE III+) Practical on IBM - PC, AT & MAT 386 Industrial Control MS DOS Operating System

கல்வித் தகைமை
G. C E. (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
காலம்: One year

- (iii) Advanced Diploma in Computing
(ஆங்கில மூலம்)
Syllabus includes British Computer Society (B C S.) Part I and Australian Computer Society A C S Examination

கல்வித் தகைமை:
G C E (O/L) 5 subjects including Maths English & G. C E (A/L) one subject.
Duration: One Year

**3. Engineering Course**
(6 Semesters)

Full time, preparing students for E. C. E Part I (London) Exam & I. E. S. L Part I Exam).

Qualification:
G C. E. (A/L) Maths with 3 or 4 Passes in two sittings.

**4. Tech. Certificate Course**
(ஆங்கில மூலம்)

- (i) Radio & T. V. Servicing
- (ii) Automobile Practice

கல்வித் தகைமை:
G C E (O/L) with Maths & Science
காலம்: One Year

**5. Craft Certificate Courses**
(தமிழ் மூலம்)

- (i) ஒட்டுனர் பயிற்சி (Welding Practice)

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) படித்திருத்தல் வேண்டும்.
காலம்: ஒரு வருடம்

முக்கிய குறிப்பு:
விண்ணப்பப் படிவம்
விலை 10 ரூபா
பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்:
1 J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டை.
2. ST. JOHNS COLLEGE, WELLFARE கழகம்.

விண்ணப்ப முடிவு திகதி: 20-06-1991

SELECTION AFTER INTERVIEW

- பணிப்பாளர்.

[இ-0094]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
**சின்னத்தம்பி சுப்பிரமணியம்**
(சரவணை மேற்கு, வேலணை)

மலர்வு: 18 - 4 - 1902
உதிர்வு: 14 - 5 - 1991

நாளை 13 - 6 - 1991 காலை நடைபெறும் எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் (சரவணை மேற்கு) அவர்களின் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்வதுடன், அன்னாரின் நினைவாக வழங்கும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

50/45, ஆஸ்பத்திரி வீதி,
வைரவர் கோவிலடி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[17158]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 30 - 09 - 1911

மறைவு: 14 - 03 - 1991

**இரத்தினசிங்கம் சேனாதிராசா**
(கிளாக்கர் ஐயா)
(வாழ்- காரியாதிகாரி பணிமனை, இளைப்பாறிய பிரதம எழுதுநர்)

பெற்றாய் பெயரிட்டாய் பேணி
வளர்த்து ஆளாக்கி
பற்றாய் பலனாய் வாழ வழிகாட்டி
நற்றாய் என நின்ற நம்ப!
எற்றே எம்மை மறந்து நீ
இதை கற்றாள் நலந் தாய்?
வற்றா அருள் எமக்கு எந்தையே!
என்றும் நல்குதியே.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

34, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[இ-0101]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இந்து ம. வி. தற்காலிகமாக மூடப்பட்டது

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தை கிளிநொச்சி கல்வித் திணைக்களம் தற்காலிகமாக மூடியுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த பாடசாலை மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சில் மாணவ தலைவன் சத்தியமூர்த்தி கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. அதனைத் தொடர்ந்தே பாடசாலையை கல்வித் திணைக்களம் மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமானக் குண்டு வீச்சால் பாடசாலை கட்டடத்துக்குப் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. [உ-76]

## சீ-பிளேன் நோட்டம்

குருநகர் ஜூன் 12

நீண்ட நாட்களின் பின் நேற்று மாலை 5-35 மணியளவில் சீ பிளேன் ஒன்று யாழ்நகரின் மேலாகப் பறந்து நோட்டமிட்டுச் சென்றது. [உ-51 5]

# இந்தியாவில் இன்று 2ஆம் கட்ட வாக்களிப்பு

புதுடில்லி, ஜூன் 12

இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்களிப்பு இன்று 13 மாநிலங்களிலும் 2 யூனியன் பிரதேசங்களிலும் நடைபெறும்.

114 எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் தகைமையை 10 கோடி 60 லட்சம் பேர் பெற்றுள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை 187 எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்காக மூன்றாம் கட்ட வாக்களிப்பு இடம் பெறும்.

முதலாம் கட்ட வாக்களிப்பு 204 நாடாளுமன்றத் தொகுதிகளில் கடந்த மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்றது தெரிந்ததே. [ஆ-எ]

## மிதிவெடியில் சிக்கியவர் தற்கொலை!

நேற்றுமுன்தினம் வவுனியா கொக்குவெளிச் சந்தி இராணுவ முகாமில் இருந்து நொச்சிமோட்டைப் பக்கமாக இராணுவத்தினரும் புளொட் இயக்கத்தினரும் முன்னேறினர்.

இவர்கள் 50 யார் தூரம் முன்னேறிய போது இக் குழுவில் ஒருவர் மிதிவெடியில் சிக்கி கால் இழந்தார். காலை இழந்தவர் பின்னர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

## அரசாங்கத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யும் தந்திரத்திட்டமே இக் குற்றச்சாட்டு'' — என்றார் அவர்.

ராஜீவை புலிகள் கொன்றதாக குற்றஞ்சாட்டி இந்திய இராணுவத்தின் உதவியைப் பெற ஸ்ரீலங்கா அரசு நினைக்கிறது.'' என்று கூறிய திரு. திலகர் இந்தியாவும் ஐரோப்பிய நாடுகள் சிலவும் மத்தியஸ்தர்களாக இருந்தால் மட்டுமே இப்பேச்சுவார்த்தை சாத்தியமாகும் என்றும் சொன்னார்.

'' விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும்இடையே பேச்சுக்கள் நடைபெறும் போது ஐக்கிய நாடுகள் சபை போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கலாம் என்று —

ஸ்ரீலங்கா அரசின் போரை நிறுத்த தமது இயக்கம் கொண்டுள்ள நிலைப்பாடு இதுவே — என்றும் திரு திலகர் ஏ. பி.க்கு அளித்த தொலைபேசிப் பேட்டியில் மேலும் கூறினார்.

வடக்கு - கிழக்கு சண்டை மீண்டும் தொடங்கி ஓராண்டு முடிவடையும் வேளையில் விடுதலைப் புலிகளின் சமாதான அழைப்புமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக்கருதப்படுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

தற்போது வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன என்று சர்வதேச செய்திகள் உறுதி செய்கின்றன என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சமாதானப் பேச்சுக்கான அழைப்புக் குறித்து கருத்துக்கூற ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் மறுத்து உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## மட்டக்களப்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணுவத்தினர் முன்னேறிய போது முறிதாண்டிப்பள்ளத்தில் வைத்து அவர்கள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் முன்னேற முடியாது அவ்வப்பகுதிகளில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதல்களின் போது படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் தெரியவரவில்லை. [உ.த]

## பெற்றோரைத் தேடி அழும் திக்குத் தெரியாத குழந்தைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

அனாதரவாக வீதியில் நின்ற மூன்று குழந்தைகள். தங்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு கேட்டு அழுகிறார்கள்.

ஆனால் அவர்களை வீதியில் கண்டு, கருணை கொண்டு தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று ஆதரித்தவர், அந்தப் பிஞ்சுகளின் பெற்றோர் யார், எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாமல் திண்டாடுகிறார்!

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள்ள உணவு விடுதி ஒன்றின் முன்னால், நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இந்த மூன்று குழந்தைகளும், போகுமிடம் தெரியாமல் அழுத வண்ணம் நின்றனர்.

உணவு விடுதி உரிமையாளர் அவர்களுக்கு அருகே சென்று விவரம் கேட்டார். மூத்த பிள்ளைக்குச் சுமார் நான்கு வயது மதிக்கலாம். பெண் குழந்தை!

அந்தப் பிள்ளை மட்டுமே பேசுகிறது. தனது பெயர் றொசிக்கா என்றும் மற்ற இரண்டு பிள்ளைகளின் பெயர்களும் ரஜிவன், ரஜந்தன் என்றும் கூறுகிறது. தந்தையார் பெயர் என்ன என்று கேட்டதற்கு, ராசா என்றும் மேசன் தொழில் செய்பவர் என்றும் கூறுகிறது.

அதற்கு மேல் எந்த விவரத்தையும் அந்தப் பிள்ளையால் கூறமுடியவில்லை.

ஹோட்டல் உரிமையாளர் இது விடயம் சம்பந்தமாக, நகரில் உள்ள எல்லா அகதி முகாம்களுக்கும் அறிவித்தார். எவரும் பிள்ளைகளை நேற்று மாலை வரை தேடி வரவில்லை. உதயனின் உதவியை நாடினார்.

இப்பிள்ளைகளின் பெற்றோர் அல்லது உறவினர்கள் விவரம் தெரிந்தால் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

அன்னக்கிளி ஹோட்டல், கண்டி வீதி, [திருக்குடும்ப கன்னியர் மடத்துக்குச் சமீபமாக] யாழ்ப்பாணம். [அ]

# யாழ் இந்துவில் இன்றுமுதல் ஓவியக் கண்காட்சி!

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும் முத்தமிழ் விழாவை ஒட்டி யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இந்த ஓவியக் கண்காட்சி ஒன்று இன்றுமுதல் வெள்ளிக்கிழமை வரை மூன்று நாட்களும் நடைபெறவிருக்கின்றது.

மூன்று நாட்களும் பிற்பகல் 2 30 மணிமுதல் மாலை 6 மணிவரை கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிடலாம்.

தமிழீழத்தின் தலைசிறந்த கலைஞர்களின் ஆக்கங்கள், மரபு ஓவியங்கள், நவீன ஓவியங்கள், வர்ண ஓவியங்கள், கைவினைப் பொருள்கள் என பல் வேறுபட்ட படைப்புகள் காட்சிக்கு வைக்கப்படவிருக்கின்றன.

படைப்புகளில் கணிசமானவை சமகால நிகழ்வையும் தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தையும் சித்திரிப்பவையாகவும் அமைந்துள்ளன. [உ]

## அந்தோனியார் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

பாஷையூர் புனித அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவத்தின் 13 ஆவது நாளான இன்று பிற்பகல் 4-30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஊர்வலமும் நடம்பெறும்.

நாளை அதிகாலை 5 மணிக்கு திருப்பலியும் காலை 6-30 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 8-30 மணிக்கு தேர்ப்பவனியும் இடம் பெறும் [த-51]

## படப்பிடிப்பா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செல்ல முடிந்ததாக புலனாய்வாளர் கருதுகின்றனர்

அதனைத் தொடர்ந்து படப்பிடிப்பாளர்கள் பலர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

இதற்கிடையில் —

கேரள மாநிலத்தில் வைத்து ஒருவரும் சென்னை விமான நிலயத்தில் வைத்து இன்னொருவருமாக, இரண்டு ஈழத்தமிழர்கள் ராஜீவ் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-எ]

## ஜனசமுத்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தினார்: அதையடுத்து விடுதலைப் புலிகளின் மக்கள் உறவு. கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் திரு. அரசண்ணா, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் திரு. அ. துரைராசா ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

உரைகளை அடுத்து ''கேள்வியும் பதிலும்'' என்ற தலைப்பில் கவியரங்கும், தொடர்ந்து இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

முத்தமிழ் விழாவை ஒட்டி நெல்லியடி எங்கும் கண்ணைக் கவரும் விதத்தில் அலங்காரப் பந்தல்கள், வண்ணச் சோடனைகள் காணப்பட்டன.

மாவீரர் கலையரங்கு அமைந்த மைதானம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த விதம், கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. [உ-15]

# அறிவித்தல்

சுகாதார உதவியாளராக பயிலுநர்கள் தெரிவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுள் தகைமை உடையவர்களுக்கு 24-6-91 / 25-6-91 திகதிகளில் இப் பணிமனையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது. இவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். [இ/0107]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திலகவதி இராஜரட்ணம்

[ஆசிரியை யாழ் இந்து மகளிர் கல்லூரி]

திருமதி திலகவதி இராஜரட்ணம் காலமானார். அன்னார் கிழிகிட்டியைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் கந்தப்பிள்ளை-இராசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், சுதுமலை இராஜரட்ணம் [நூலகர் யாழ் இந்துக் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், குகானந்தனின் (யாழ். இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்) அருமைத் தாயாரும், சிவகடாட்சம் (கணக்காளர் கொழும்பு), லோகேஸ்வரி, செந்தில் மணி தேவி ஆகியோரின் சகோதரியும், டாக்டர் சந்திரவதனி, செந்திலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [12-6-91] பிற்பகல் 2 மணிக்கு 74, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூநவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:

74, அரசடி வீதி — பொ. இராஜரட்ணம் [கணவன்]
[16989]

## திரு. ஆறுமுகம் செல்லப்பா

திரு ஆறுமுகம் செல்லப்பா காலமாகி விட்டார். இவர் மொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும், சண்டிலிப்பாயை வதிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ் சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், பராசக்தி [நெசவு ஆசிரியை], சிவகுணநாயகி, ஈரமேஸ்வரி, சீனிவாசகம் [தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், கணக்காளர்], ஜெகதாம்பிகை, கைலேஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பத்மநாதன், சிவதாஸன், காலஞ்சென்ற சந்திரன், பரஞ்சோதி, ராசரட்ணம், லீலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று [12 - 6 91] காலை 10 மணியளவில் கொட்டுப்பனை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

[16990] — மு பத்மநாதன்

# கொழும்பிலிருந்து உணவு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாதாந்தம் பத்துக் கப்பல்களில் உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதான தோரணையில் அவற்றின் பிரசாரம் நடக்கிறது.

ஆனால் கடந்த ஒரு வருடத்தில் கப்பல்கள் மொத்தம் 26 தடவைகள் மட்டுமே கொழும்பிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வந்துள்ளன.

அரிசி, மா, சீனி ஆகிய மூன்று அத்தியாவசியப் பொருள்களை கணக்கெடுப்பில் சேர்த்துக்கொண்ட போது குடாநாட்டு மக்களின் மொத்தத் தேவையில் சரியாக 33 3 வீதமானவை மட்டுமே இங்கு கிடைத்துள்ளன.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலைமை இதைவிட மோசமானது என அறியப்படுகிறது.

யாழ். மாவட்டத்துக்கு கிடைத்த உணவுப் பொருள்களின் அட்டவணை விவரம் வருமாறு:-

| உணவுப் பொருள் | மாதாந்தம் தேவையானது | ஒரு வருடத்துக்குத் தேவையானது | முழு வருடமும் கிடைத்த மொத்த அளவு | வீதம் |
|---|---|---|---|---|
| அரிசி | 5,000 | 60,000 | 19,345 | 32.2% |
| மா | 3,000 | 36,000 | 14,336 | 39.8% |
| சீனி | 2,000 | 24,000 | 6,376 | 26.5% |
| கூட்டு மொத்தம் | 10,000 | 120,000 | 40,057 | 33.3% |

[ஈ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org